அனைவருக்கும் இனிய தமிழ், சிங்களப் புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த ஆண்டு இனிய ஆண்டாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# புலமைக்கதிர் 5

புதிய பாடத்திட்டம் - 2020

**கணிதம்** **நேரம்:- 01.00மணி**

## - நீளமும் தூரமும் -

* நீளத்தை அளக்கப் பயன்படும் அலகுகளாவன mm, cm, m, km என்பன பயன்படுத்தப்படுகின்றன.
* இரண்டு நகரங்களுக்கு இடையிலான தூரம், வீதியின் நீளம், நதியின் நீளம், கால்வாய்களின் நீளம் போன்றவற்றை அளப்பதற்கு km பயன்படுத்தப்படுகின்றது.

(1000m =1 km)

01. 2 கிலோமீற்றரில் எத்தனை மீற்றர் உண்டு? ..........................................................

02. 1km 500m இல் எத்தனை மீற்றர் உண்டு? ..........................................................

03. 3050m இனை கிலோமீற்றர்- மீற்றரில் கூறுக? ..........................................................

04. காலைவேளை பாடசாலை நோக்கிப்புறப்பட்ட அபிமான் 1km 350m நடந்தும் பின்னர் 2km 750m தூரத்தை முச்சக்கர வண்டியிலும் சென்றான். அவன் சென்ற மொத்தத் தூரம் யாது?

..........................................................................................

05. சிபிராஜ் வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையிலான தூரம் 7km 600m அவன் 1km 750m நடந்தும் மீதித்தூரத்தை நண்பனின் துவிச்சக்கர வண்டியின் உதவியுடன் செல்வான் எனின் அவன் துவிச்சக்கர வண்டியில் செல்லும் தூரம் யாது?

..........................................................................................

06. 18km நீளமான பாதையில் $\frac{1}{6}$ பங்கிற்கு தார் ஊற்றப்பட்டு வீதி போடப்பட்டது. தார் ஊற்றப்பட்ட வீதியின் அளவு யாது?

..........................................................................................

07. நிசாரின் மோட்டார் சைக்கிளின் தூரமானி | 0 | 0 | 3 | 8 | 1 | 9 | 2 | km ஐக் காட்டியது. அவனது மோட்டார் சைக்கிள் மேலும் 808 km தூரம் ஓடியது, பின் தூரமானி காட்டும் வாசிப்பை அடைப்பிற்குள் எழுதுக?

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

05.அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடைதருக?

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தபால் நிலையம் |
| | | | வங்கி | **12km** |
| | | வைத்தியசாலை | **2km** | **5km** |
| | பாடசாலை | **7km** | **9km** | **21km** |
| மாதவன் வீடு | **10km** | **16km** | **23km** | **5km** |

1. மாதவன் வீட்டில் இருந்து வங்கி வரையான தூரம் யாது?

   ..........................................................................................................

2. எந்த இரண்டு இடங்களுக்கு இடையிலான தூரம் மிகவும் அதிகமாகும்?

   ..........................................................................................................

3. எந்த இரண்டு இடங்களுக்கு இடையிலான தூரம் மிகவும் குறைவாகும்?

   ..........................................................................................................

4. வீட்டிலிருந்து புறப்பட்ட மாதவன் வைத்தியசாலை சென்று அங்கிருந்து வங்கி சென்றான் அவன் பயணித்த மொத்தத் தூரம் யாது?

   ..........................................................................................................

5. தபால் நிலையத்தில் இருந்து வைத்தியசாலை சென்று அங்கிருந்து பாடசாலை செல்ல எவ்வளவு தூரம் பயணிக்க வேண்டும்?

   ..........................................................................................................

## <u>நுண்ணறிவு வினா</u>




Pயில் இருந்து அம்புக்குறிகாட்டப்பட்ட திசைவழியே Q வுக்கு செல்ல எத்தனை வழிகள் உள்ளன?

..........................................................

06.அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடைதருக?




(கொழும்பில் இருந்து ஏனைய இடங்களுக்கான தூரம் என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் முக்கியமானது)

1. கொழும்பில் இருந்து சிலாபம் செல்வதற்கான தூரம்யாது?

   ...............................................

2. கொழும்பிலிருந்து புத்தளம் செல்வதற்கான தூரம் யாது?

   ...................................................

3. நீர்கொழும்பில் இருந்து மங்களஎலிய வரையான தூரம் யாது?

   .....................................................

4. கொழும்பில் இருந்து சிவாபம் சென்று மீண்டும் கொழும்பு வரை பயணிக்க எவ்வளவு தூரம் பயணம் செய்ய வேண்டும்?

   .............................................................

5. மகாவெவவில் இருந்து புத்தளம் சென்று மீண்டும் சிலாபம் வரை பயணிக்க எவ்வளவு தூரம் பயணம் செய்ய வேண்டும்?

   .............................................................

07.அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு வெற்றிடத்தை நிரப்புக?




| இருந்து | வரை | தூரம் |
|---|---|---|
| அம்பாந்தோட்டை | கொழும்பு | 240 km |
| காலி | அம்பாந்தோட்டை | 125 km |
| கொழும்பு | மாத்தறை | 155 km |
| காலி | கொழும்பு | ................. |

08. வரிப்பட உதவியுடன் வினாக்களுக்கு விடை தருக?




(இங்கு கொழும்பில் இருந்து காலி வரையான தூரம் கவனத்திற் கொள்ளப் படவேண்டும் அடுத்து காலியில் இருந்து அம்பாந்தோட்டை வரையான தூரம் ஆகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்)

1. கொழும்பில் இருந்து காலிவரையான தூரம் யாது?

   .......................................................................
2. கொழும்பில் இருந்து காலி ஊடாக மாத்தறை வரையான தூரம் யாது?

   .......................................................................
3. காலியில் இருந்து அம்பாந்தோட்டை வரையான தூரம் யாது?

   .......................................................................
4. கிக்கடுவையில் இருந்து காலியூடாக மாத்தறை வரையானதூரம் யாது?

   .......................................................................
5. கொழும்பிலிருந்து காலியூடாக அம்பாந்தோட்டை வரையான தூரம் யாது?

   .......................................................................

09. வரிப்பட உதவியுடன் வினாக்களுக்கு விடை தருக?




i. வவுனியாவில் இருந்து புத்தளம் வரையான தூரம் யாது?

.........................................................................................

ii. அனுராதபுரத்தில், நொச்சியாகமம் ஊடாக புத்தளம் வரையான தூரம் யாது?

.........................................................................................

iii. மதவாச்சியில் இருந்து நொச்சிகாமம் வரையான தூரம் யாது?

.........................................................................................

- நன்றி -

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---